# நியாயப் பிரமாணம் 613

தோரா என்ற எபிரெய வார்த்தையால் அழைக்கப்படும் நியாயப்பிரமாணம் வேதாகமத்திலுள்ள முதல் 5 புத்தகங்களான ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம் என்பவைகளைக் குறிக்கிறது. நியாயப் பிரமாணத்தில் 613 கட்டளைகள் உள்ளன. இதில் செய் என்று சொல்லும் கட்டளைகள் 248ம், செய்யக்கூடாது என்று சொல்லும் கட்டளைகள் 365ம் உள்ளன. தேவாலயம் இன்னும் எருசலேமில் கட்டப்படாததால் அநேக பிரமாணங்கள் கைக்கொள்ளக்கூடாதவையாக இருக்கின்றன. இந்நாளில் நாம் கைக்கொள்ளக் கூடிய பிரமாணங்களில் 194 செய்யக் கூடியவைகளும், 77 செய்யக் கூடாதவைகளும் இருக்கின்றன. 26 கட்டளைகள் இஸ்ரவேல் நாட்டுக்குள் மாத்திரம் நிறைவேற்றப்படக் கூடியவை.

தாலீத் ( Tallith – சிறிய கூடாரம் ) என்ற ஜெப வஸ்திரத்தை இஸ்ரவேல் மக்கள் ஜெபிக்கும்போது பயன்படுத்த வேண்டும். இதன் 4 முனைகளிலும் 7 வெள்ளை நூல்களும் 1 நீல நிற நூலும் உள்ளன. 7 வெள்ளை நூல்கள் பரிசுத்தத்தையும் பரிபூரணத்தையும் 1 நீல நிற நூல் மேசியாவையும் குறிக்கும். இதை 5 முடிச்சுகளாக கட்டியிருப்பார்கள் இது தோரா என்றழைக்கப்படும் 5 ஆகமங்களை குறிக்கிறது. இந்த நூல்கள் Tzitzit என்று அழைக்கப்படுகின்றன. Tzitzit என்ற எபிரெய வார்த்தையின் எண் தொகை 600. அதோடு 8 நூல்களையும் அவற்றிலுள்ள 5 முடிச்சுகளையும் இணைக்கும்போது 613 என்ற எண் வருகிறது. இது நியாயப் பிரமாணத்தின் 613 கட்டளைகளையும் குறிக்கிறது.

இந்த 613 கட்டளைகளும் 5 பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவை 1. தேசிய சட்டங்கள், 2. Civil சட்டங்கள் ( பொது காரியங்கள் ) 3. குடும்ப சட்டங்கள் 4. மத சட்டங்கள், 5. தீங்கியல் சட்டங்கள். இவற்றில் மத சட்டங்களையும் தீங்கியல் சட்டங்களையும் இயேசு கிறிஸ்து நிறைவேற்றி முடித்தார்.

கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். இந்த கட்டளைகள் என்ன என்ன என்று நாம் அறிந்து கொள்வோமானால் கீழ்ப்படிவதற்கும் அநேக நேரங்களில் நாம் என்ன செய்வது என்று அறிந்து கொள்வதற்கும் பிரயோஜனமாயிருக்கும்.

இந்த நியாயப்பிரமாணங்களை மனுஷீகமாக கடைபிடிக்கமுடியாது. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னுடைய இளைப்பாறுதலுக்குள் வாருங்கள்

நியாயப்பிரமாணமாகிய நுகத்தை நான் உங்கள் மேல் வைக்கும் போது அது உங்களுக்கு இலகுவாக இருக்கும்.

மத்தேயு 11 : 28. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

29. நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

30. என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.

இந்த 613 கட்டளைகளும் என்னவென்று கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. வாசித்து பயனடையுங்கள். தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

பின்பக்க அட்டை விளக்கம் :

இது முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவ மக்கள் பயன்படுத்திய மாதிரி. இதில் 3 பகுதிகள் உள்ளன. முதல் பகுதி ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள Menorah என்று அழைக்கப்படும் குத்து விளக்கு. பரிசுத்த ஸ்தலத்தில் இது வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தது. இது பழைய ஏற்பாட்டைக் குறிக்கிறது. இரண்டாம் பகுதி தாவீதின் நட்சத்திரம் என்றழைக்கப்படுகிறது. இது தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. மூன்றாம் பகுதியான மீன் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைக்கிறவராக இயேசு கிறிஸ்து விளங்குகிறார் என்பதே இதன் அர்த்தமாகும்.

இவாஞ்சலின் ஜெபசீலன்

## தேவன்

1. உன் தேவனாகிய கர்த்தர் நானே. யாத் 20 : 2, உபா 5 : 6

2. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.யாத் 20:3

3. கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலைசெய்யப்படவேண்டும்; சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறியவேண்டும், பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிறவன் கொலை செய்யப்படவேண்டும். லேவி 24 : 16

4. நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தர் என்று மதிக்கப்படுவேன்; லேவி 22 : 32 ( நான் பரிசுத்தர் )

29. உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியாயாக; லேவி 19 : 16

30. உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; லேவி 19 : 17

31. பழிக்குப்பழி வாங்காமல்... லேவி 19 : 18 ( பழி வாங்காதே )

32. உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமல்... லேவி 19 : 18 ( பொறாமை கொள்ளாதே )

33. உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக;. லேவி 19 : 17

34. செவிடனை நிந்தியாமல்... லேவி 19 : 14 ( நிந்திக்காதே )

35. குருடனுக்கு முன்னே தடுக்கலை வையாமல்... லேவி 19:14 ( தடுக்கலை வைக்காதே )

36. பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்துகொள்ளவேண்டும். லேவி 19 : 17

37. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவிசெய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடே கூட அதற்கு உதவிசெய்வாயாக. யாத் 23 : 5

38. உன் சகோதரனுடைய கழுதையாவது அவனுடைய மாடாவது வழியிலே விழுந்துகிடக்கிறதைக் கண்டாயானால், அதைக் காணாதவன்போல விட்டுப்போகாமல், ....உபா 22 : 4

39. உன் சகோதரனுடைய கழுதையாவது அவனுடைய மாடாவது வழியிலே விழுந்துகிடக்கிறதைக் கண்டாயானால், ....அவனோடேகூட அதைத் தூக்கியெடுத்துவிடுவாயாக. உபா 22 : 4

## எளியவரும் திக்கற்றவரும்

40. அந்நியனைச் சிறுமைப்படுத்தாமலும் ஒடுக்காமலும் இருப்பீர்களாக; யாத்22:21

41. நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும்போது, உன் வயலின் ஓரத்திலிருக் கிறதைத் தீர அறுக்காமல்... லேவி 19 : 9

உங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கையில், வயலின் ஓரத்தில் இருக்கிறதை முற்றிலும் அறுக்காமலும், ....லேவி 23 : 22 ( முழுவதும் அறுக்க வேண்டாம் )

42. அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; லேவி 19 : 10 ( வெள்ளாண்மையில் அறுக்காமல் விட்டதை )

43. சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், .... லேவி 19 : 9

44. அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; லேவி 19 : 10 ( சிந்திக்கிடக்கும் கதிர்களை )

45. உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமல், லேவி 19 : 10

46. அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; லேவி 19 : 10 ( திராட்சையின் பின் அறுப்பு )

47. உன் திராட்சத்தோட்டத்திலே .... சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமல் லேவி 19 : 10

48. அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; லேவி 19 : 10 ( சிந்திக்கிடக்கும் திராட்சை பழங்களை )

49. நீ உன் பயிரை அறுக்கையில் உன் வயலிலே ஒரு அரிக்கட்டை மறதியாய் வைத்துவந்தாயானால், அதை எடுத்து வரும்படி திரும்பிப் போகவேண்டாம்; உபா 24 : 19

50. அதைப் பரதேசிக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் விட்டுவிடுவாயாக. உபா 24 : 20 ( மறதியாய் விட்ட அரிக்கட்டை )

51. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தின் எந்த வாசலிலும் உன் சகோதரரில் எளியவனான ஒருவன் இருந்தால், எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும் உபா 15 : 7 ( கையை மூடாமல் இரு )

52. தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உபா 15 : 11

## அந்நியரிடம் நடந்து கொள்ளும் விதம்

53. அந்நியரைச் சிநேகிப்பீர்களாக. உபா 10 : 19

54. அந்நியனைச் சிறுமைப்படுத்தாமலும் ஒடுக்காமலும் இருப்பீர்களாக;உபா 22:21

55. அந்நியனைச் சிறுமைப்படுத்தாமலும் ஒடுக்காமலும் இருப்பீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியர்களாயிருந்தீர்களே. யாத் 22 : 21

56. அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக. உபா 7 : 3

57. அந்நிய ஜாதியான் கையிலே நீ கடனைத் தண்டலாம்; (திரும்ப வாங்கலாம்) உபா 15 : 3

சகோதரன் செய்யவேண்டிய கடமையைச் செய்ய அவன் மனதில்லாதிருக்கிறான் என்று சொல்வாளாக. 8. அப்பொழுது அந்தப் பட்டணத்து மூப்பர் அவனை அழைப்பித்து அவனோடே பேசியும், அவன் அவளை விவாகம்பண்ணிக்கொள்ள எனக்குச் சம்மதமில்லை என்று பிடிவாதமாய்ச் சொன்னால், 9. அவன் சகோதரனுடைய மனைவி மூப்பரின் கண்களுக்கு முன்பாக அவனிடத்தில் வந்து, அவன் காலிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றி, அவன் முகத்திலே துப்பி, தன் சகோதரன் வீட்டைக் கட்டாதவனுக்கு இப்படியே செய்யப்படவேண்டும் என்று சொல்லக்கடவள். 10. இஸ்ரவேலில் அப்படிப்பட்டவன் வீடு, பாதரட்சை கழற்றிப்போடப்பட்டவன் வீடு என்னப்படும். உபா 25 : 7 – 10

## தவறான உறவுகள்

82. ஒருவனும் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை நிர்வாணமாக்கும்படி அவளைச் சேரலாகாது; லேவி 18 : 6

83. …. உன் தாயையாவது நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் தாயானவள்; அவளை நிர்வாணமாக்கலாகாது. லேவி 18 : 7

84. உன் தகப்பனையாவது …. நிர்வாணமாக்கலாகாது; லேவி 18 : 7

85. உன் தகப்பனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது; லேவி 18 : 8

86. உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை நிர்வாணமாக்கலாகாது. லேவி 18:9

87. உன் தகப்பனுடைய மனைவியினிடத்தில் உன் தகப்பனுக்குப் பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது; லேவி 18 : 11

88. உன் குமாரனுடைய மகளையாவது …நிர்வாணமாக்கலாகாது; லேவி 18 : 10

89. ….. உன் குமாரத்தியினுடைய மகளையாவது நிர்வாணமாக்கலாகாது; லேவி 18 : 10

90. உன் குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது

91. உன் தகப்பனுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; லேவி 18 : 12

92. உன் தாயினுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது; லேவி 18 : 13

93. உன் தகப்பனுடைய சகோதரனை நிர்வாணமாக்கலாகாது; அவன் மனைவியைச் சேராயாக; லேவி 18 : 14

94. உன் தகப்பனுடைய சகோதரனை நிர்வாணமாக்கலாகாது; லேவி 18 : 14

95. உன் மருமகளை நிர்வாணமாக்கலாகாது; அவள் உன் குமாரனுக்கு மனைவி, அவளை நிர்வாணமாக்கலாகாது. லேவி 18 : 15

336. அடையாளமான எழுத்துகளை உங்கள்மேல் குத்திக்கொள்ளாமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர். லேவி 19 : 28

337. அஞ்சனம்பார்க்கிறவர்களை நா..டாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்படவேண்டாம்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். லேவி 19 : 31

338. குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்படவேண்டாம்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். லேவி 19 : 31

339. அஞ்சனம் பார்க்கிறவனும் …உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்.

உபா 18 : 10

340. சூனியக்காரனும், … உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். உபா 18 : 10

341. மந்திரவாதியும்…. உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். உபா 18 : 11

342. சன்னதக்காரனும், ( ஆவிகளிடம் விசாரிப்பது )…உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். உபா 18 : 11

343. மாயவித்தைக்காரனும்……. உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்.

உபா 18 : 11

344. செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். உபா 18 : 11

345. உங்கள் தலைமயிரைச் சுற்றி ஒதுக்காமலும்…. இருப்பீர்களாக;

லேவி 19 : 27

346. தாடியின் ஓரங்களைக் கத்தரிக்காமலும்… இருப்பீர்களாக; லேவி 19 : 27

347. செத்தவனுக்காக உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும், ….. இருப்பீர்களாக; லேவி 19 : 28

348. அடையாளமான எழுத்துகளை உங்கள்மேல் குத்திக்கொள்ளாமலும் இருப்பீர்களாக; லேவி 19 : 28

349. உங்கள் கண்களுக்கு இடையிலே சவரம்பண்ணாமலும் இருப்பீர்களாக. உபா 14 : 1

350. நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு உண்டாக்கும் பலிபீடத்தண்டையில் யாதொரு தோப்பையும் உண்டாக்க வேண்டாம்; உபா 16 : 21

351. யாதொரு சிலையையும் நிறுத்த வேண்டாம் உபா 16 : 22

352. உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை ( ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகளை ) முறிய அடித்து, அவர்களைச் சங்காரம் பண்ணக்கடவாய்; உபா 7 : 2

353. அவர்களோடே உடன்படிக்கைபண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம். உபா 7 : 2

நேர்ந்துகொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும், உன் உற்சாகக் காணிக்கைகளையும், உன் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீ உன் வாசல்களில் புசிக்கவேண்டாம். உபா 12 : 17 Not to eat the flesh of the burnt-offering (Deut. 12:17). This is a Prohibition applying to every trespasser, not to enjoy any of the holy things. If he does so, he commits a trespass

550. உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும், நீ நேர்ந்துகொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும், உன் உற்சாகக் காணிக்கைகளையும், உன் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீ உன் வாசல்களில் புசிக்கவேண்டாம். உபா 12 : 17 That the kohanim shall not eat the flesh of the sin-offering or guilt-offering outside the Courtyard (of the Sanctuary) (Deut. 12:17)

551. உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும், நீ நேர்ந்துகொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும், உன் உற்சாகக் காணிக்கைகளையும், உன் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீ உன் வாசல்களில் புசிக்கவேண்டாம். உபா 12 : 17 Not to eat of the flesh of the sacrifices that are holy in a minor degree, before the blood has been sprinkled (on the altar), (Deut. 12:17)

552. உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசமபாகத்தையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும், நீ நேர்ந்துகொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும், உன் உற்சாகக் காணிக்கைகளையும், உன் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீ உன் வாசல்களில் புசிக்கவேண்டாம். உபா 12 : 17 That the kohein shall not eat the first-fruits before they are set down in the Courtyard (of the Sanctuary) (Deut. 12:17)

553. உனக்குரிய பரிசுத்த வஸ்துக்களையும், உன் பொருத்தனைகளையும் கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திற்கு நீ கொண்டுவந்து, உபா 12 : 26

554. அருவருப்பானதொன்றையும் புசிக்க வேண்டாம். உபா 14 : 3

555. உன் மாட்டின் தலையீற்றை வேலைகொள்ளாமலும், …. இருப்பாயாக. உபா 15 : 19

556. உன் ஆட்டின் தலையீற்றை மயிர் கத்தரியாமலும் இருப்பாயாக.

உபா 15 : 19

557. ஏழுநாள் அளவும் உன் எல்லைகளிலெங்கும் புளிப்புள்ள அப்பம் உன்னிடத்தில் காணப்படலாகாது; நீ முதல்நாள் சாயங்காலத்தில் இட்ட பலியின் மாம்சத்தில் ஏதாகிலும் இராமுழுதும் விடியற்காலம்வரைக்கும் வைக்கவேண்டாம். உபா 16 : 4

